# பொறுப்புடனான வன மேலாண்மை

எமது நிறுவனம் இயற்கை ரப்பரை உற்பத்தி செய்யும் உலகின் மிகச்சிறந்த மேலாண்மை நிறுவனங்களில் ஒன்றாகும் இந்த ஒரே நோக்கில் விவசாய மற்றும் மனித வள மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் .

நமது மனித வளங்களின் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நிர்வாகத்தை கொள்கை அடிப்படையில் சுற்றுச்சூழக்கு ஏற்ற பொறுப்புடன் ஒப்புக்கொண்டுள்ளோம்.

எமது தலைவரின் தலைமையிலான நிறுவனத்தின் உயரிய நிர்வாகம் இந்த நடவடிக்கைகளை மிகவும் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளவும் சர்வதேச அளவில் அங்கீகரிப்பட்டுள்ள Forest Stewardship Council ™ (வன பரிபாலன கவுன்சில்) (FSC™) மேற்பார்வையின் கீழ் கொள்கையளவில் முடிவு செய்துள்ளது. அதன்படி எங்கள் ரப்பர் உற்பத்திகள் எமது சொந்த காடுகள் மற்றும் பிற சாகுபடிகள் போன்ற அணைத்து மேலாண்மை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள நிறுவனம் உறுதியாக உள்ளது.

எதிர்காலத்தில் காடுகளை பாதுகாக்கப்பயன்படுத்தப்படும் சில எளிய வழிமுறைகள் பின்வருமாறு:

1. பயிற்றப்பட்ட அளவை விட அதிகமான மரங்களை வெட்டி அகற்ற வேண்டாம்
2. இருக்கும் மரங்கள் போதுமானதாக இல்லாதபோது புதிய தாவரங்கள் இயற்கையாகவே வளரும்
3. காட்டில் ஏற்பக்கூடிய சேதத்தை குறைத்தல் மற்றும் காட்டில் சாலைகள் அமைப்பதை குறைத்தல்
4. பொருத்தமான வன மேலாண்மை முறைமூலம் காடு வளர்ப்பை கட்டுப்படுத்தல்
5. காடுகளில் இறந்த தாவரங்களை பூச்சிகள் மற்றும் விலங்குகளின் வாழ்விடங்களுக்கு ஏற்படுத்திக்கொடுத்தல்
6. விலங்குகளை வேட்டையாடுதல் தவிர்ப்பது
7. கழிவுப்பொருட்கள் அல்லது எண்ணைக்கசிவுகள் காட்டுக்குள் சிந்துவதற்கு அனுமதிக்காமை

முறையான நிர்வாகத்துடன் காடுகள் எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கப்படும்

உலகெங்கிலும் உள்ள தோட்ட உரிமையாளர்கள் தங்கள் காடுகளை பொறுப்புடன் நிர்வகிப்பதாக கூறினாலும் அவ்வாறான நிலைமை உண்மையில் என்பதை தீர்மானிக்க ஒரு வழிமுறை இருக்கவேண்டும்.

இந்த நோக்கத்தை அடைய வனப்பொறுப்பாளர் கவுன்சில் என்ற ஒரு சுயாதீன அமைப்பு 1993 இல் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு சுற்றுசூழல் தன்னார்வ தொண்டு ஆதரவின் கீழ் இயங்குகிறது. உலகில் தோட்டங்கள் நல்ல மேலாண்மை மற்றும் விவசாய நடைமுறைகளுடன் பொறுப்புடன் நிர்வகிப்படுவதை உறுதி செய்ய அவர்கள் சான்றிதழ் அளிப்பதின்மூலம் அங்கீகரித்துள்ளனர்

தோட்டங்கள் பொறுப்புடன் நிர்வகிப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு இந்த சான்றளிக்கும் அமைப்புகளுக்கு அதிகாரம் உண்டு. இவ்வாறு ஒரு வனம் பொறுப்பான முறையில் பராமரிக்கப்படும்போது அந்த நிறுவனத்தின் சின்னம் உற்பத்திசெய்யப்படும் பொருட்களில் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. இந்த 'லோகோ' வை கொண்ட தயாரிப்புகள் சர்வதேச அளவில் மிகவும் மதிக்கப்படுகின்றன.

வாக்குறுதியளித்தபடி தோட்டங்கள் பொறுப்புடன் பராமரிக்கப்படுகிறதா என்பதை மதிப்பீடு செய்வதற்கு சான்றிதழ் அளிக்கும் அமைப்புகள் ஆண்டு தோறும் வருகை தரும்.

நன்றி

தோட்ட நிர்வாகம்

Forest Stewardship Council™ (FSC™ - C101709)